## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார்!

# வட சென்னை வளர்ச்சிக்கு மேம்படுத்தப்பட்ட அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையம் புதிய வரவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவில் பெருமிதம்!

சென்னை, நவ.26-

மேம்படுத்தப்பட்ட அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையம் திறப்பு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**மருத்துவமனைகள், முதல்வர் படைப் பகங்கள், குடியிருப்புகள், புதிய பேருந்து நிலையங்கள் என வட சென்னையின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து நாம் ஆற்றி வரும் பணிகளில் மற்றுமொரு புதிய வரவு மேம்படுத்தப்பட்ட அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையம்!**

**1967இல் முத்தமிழறிஞர் கலைஞரால் திறந்து வைக்கப்பட்ட இப்பேருந்து நிலையத்தின் மேம்பாட்டுப் பணிகளை கடந்த ஆண்டு மார்ச் மாதம் நான் அடிக்கல் நாட்டித்தொடங்கிவைத்திருந்தேன். இன்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்துள்ளார். விரைந்து பணிகளை முடித்த அமைச்சர் பி.கே.சேகர்பாபுக்குப் பாராட்டுகள்!**

**"வடக்கும் தெற்கும் ஒருசேர வளரும் சென்னையின் சீரான வளர்ச்சியை திராவிட மாடல் அரசு உறுதிசெய்யும்"!**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### 9வது சீக்கிய குரு

# ஸ்ரீ குரு தேக் பகதூரின் உயரிய தியாகத்தின் 350 வது ஆண்டு விழா!

## பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மானுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துக் கடிதம்!

சென்னை, நவ. 26 -

**பஞ்சாப் மாநில அரசின் சார்பில் ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நடைபெற்ற ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு எழுதிய வாழ்த்துக் கடிதம் வருமாறு :**



பஞ்சாப் மாநில அரசின் சார்பில், ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நடைபெற்ற ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்துகொண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதிய வாழ்த்துக் கடிதத்தை, பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களிடம் வழங்கினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 17.10.2025 அன்று தலைமைச் செயலகத்தில், பஞ்சாப் மாநில பொதுப்பணித் துறை அமைச்சர் எஸ். ஹர்பஜன் சிங் மற்றும் பஞ்சாப் மாநில நீர்வளத்துறை அமைச்சர் பிரேந்தர் குமார் கோயல் ஆகியோர் சந்தித்து, பஞ்சாப் மாநில அரசின் சார்பில் ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நவம்பர் மாதம் நடைபெற வுள்ள ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்க வேண்டுமென்று அழைப்பு விடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பாக, தகவல் தொழில்நுட்ப வியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஆகியோரை அவ்விழாவில் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

அதன் அடிப்படையில், நேற்று முன்தினம் (23.11.2025) ஸ்ரீ ஆனந்த்பூர் சாஹிப்பில் நடைபெற்ற ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350வது ஆண்டு விழாவில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி ஆகியோர் கலந்துகொண்டு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எழுதிய வாழ்த்துக் கடிதம் மற்றும் நினைவுப் பரிசினை பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களிடம் வழங்கினார்கள்.

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்களுக்கு எழுதிய வாழ்த்துக் கடிதத்தில்,**

குரு தேக் பகதூர் ஜியின் 350வது தியாகிகள் தின நினைவேந்தல் விழாவில் கலந்துகொள்ளுமாறு தனக்கு அளித்த அழைப்பிற்கு மீண்டும் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும்,

இந்த முக்கியமான நிகழ்வை சிறப்பிக்கும் வகையில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் டாக்டர் பழனிவேல் தியாகராஜன் அவர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களையும் தனது சார்பாக இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டதாகவும், அவர்களை அன்புடன் வரவேற்க முன்வந்த தங்கள் நல்லெண்ணத்திற்கு நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், உங்களிடம் வழங்குவதற்கு அவர்களிடம் அளித்துள்ள நினைவுப் பரிசினை அன்புடன் ஏற்றுக்கொள்ளு மாறும் வேண்டுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

விழா மிகச் சிறப்பாக நடைபெற தனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, குரு தேக் பகதூர் அவர்கள் நிலைநாட்டிய துணிச்சல், கருணை மற்றும் மதச் சுதந்திரம் ஆகிய உன்னத இலட்சியங்களுக்கு தனது மரியாதையையும் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.






## வட கிழக்குப் பருவமழையினால்

# நீர் நிலைகளில் உள்ள நீர் இருப்பு நிலவரங்கள் குறித்த ஆலோசனை!

## அமைச்சர் துரைமுருகன் மேற்கொண்டார்!



சென்னை, நவ.26-

சென்னை தலைமைச்செயலகத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (24.11.2025) வடகிழக்கு பருவமழையினால் தற்போது நீர்நிலைகளில் உள்ள நீர் இருப்பு நிலவரங்கள், எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், தற்போது ஏற்பட்டுள்ள பாதிப்பு விவரங்கள் குறித்து அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

கடந்த சில தினங்களாக தென் மாவட்டங்களில் குறிப்பாக தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் அதிக மழை பொழிவு காரணமாக எழுந்துள்ள நிலைமைகள் குறித்தும் அதன் காரணமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மதுரை மண்டல பொறியாளருக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கினார்.

மேலும் மதுரை மண்டலத்தில் வெள்ள தடுப்பிற்காக செயல்படுத்தப்பட்ட சிறப்பு தூர்வாரும் பணிகள் மற்றும் வெள்ளத்தடுப்பு பணிகள் நிறைவுபெற்றுள்ள பின்னர் உள்ள வெள்ள நிலைமைகள் குறித்தும் பொறியாளர்களிடம் கேட்டறிந்தார்.

தென்காசி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நீர்தேக்கங்கள் நிரம்பியுள்ளதாலும் தாமிரபரணியில் ஏற்கனவே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாலும் எதிர்வரும் மழைப்பொழி வினை எதிர்கொள்ள தயாராக இருக்குமாறு பொறியாளர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கினார்.

திருச்சி மண்டலத்தில் நடைபெற்று வரும் வெள்ளத்தடுப்பு பணிகள், காவிரி டெல்டா மாவட்டங்களான திருவாரூர், நாகப்பட்டினத்தில் வடிகால்களில் தடையில்லாமல் நீர் செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை கள் குறித்தும் கேட்டறிந்தார். மேலும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத்தடுப்பு பணிகளை விரைவு படுத்தவும் அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளார்.

வரும் வாரங்களில் மழை அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால், செயலாளர் அவர்கள் இந்த வாரத்தில், திருநெல்வேலி, தூத்துக்குடி பகுதிகளுக்கு சென்று நிலைமையை ஆய்வு செய்ய கோரினார்.

பெரும் வெள்ளம் ஏற்பட்டால், நிலைமையை துரிதமாக சமாளிக்கவும், கண்காணிக்கவும், பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளவும் ஏதுவாக, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, டெல்டா ஆகிய பகுதிகளுக்கென்று தனித் தனி குழுக்களை ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் உரிய ஆலோசனை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் பெரும்மழை பொழிவினை கணக்கிற்கொண்டு தமிழகம் முழுவதும் உள்ள நீர்த்தேக்கங்கள், ஏரிகள் மற்றும் இதர நீர்நிலைகளின் நீர் இருப்பில் முழுக்கொள்ளளவிலிருந்து 10% முதல் 20% வரை கொள்ளளவினை குறைத்து வைத்து நீர்நிலைகளை பாதுகாக்கவும், வெள்ள பாதிப்பு ஏற்படாமல் தவிர்ப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மண்டலப் பொறியாளர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும், எதிர்பாராத வகையில் நீர் நிலைகளில் ஏற்படும் உடைப்புகளை போர்கால அடிப்படையில் சீரமைப்பதற்கு ஏதுவாக, தேவையான JCB போன்ற கனரக இயந்திரங்களையும், மணல் மூட்டைகளையும் இருப்பில் வைத்துக்கொள்வதை அனைத்து மண்டல தலைமைப்பொறியாளர்களும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இவ்வாலோசனை கூட்டத்தில் அரசு செயலாளர், ஜெ.ஜெயகாந்தன், நீவது, முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர்(பொது) சு.கோபாலகிருஷ்ணன், மற்றும் சென்னை மண்டல பொறியாளர்கள் தலைமைச் செயலகத்திலும் மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மண்டல பொறியாளர்கள் காணொளிக்காட்சி வாயிலாகவும் கலந்து கொண்டனர்.

---

## இளைஞர் எழுச்சி நாள் விழா!

# கரூரில் ரூ.49 லட்சம் பரிசுத் தொகையுடன் விளையாட்டுப் போட்டிகள்! ஆண்களுக்கான கபடி போட்டி!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பார்வையிட்டார்!



கரூர். நவ.26-

நவ.27 இளைஞர் எழுச்சி நாளை கொண்டாடும் வகையில், ரூ 49 லட்சம் பரிசுத் தொகையுடன் பல்வேறு விளையாட்டு போட்டிகள் கரூர் மாவட்டக் கழகம் சார்பில் நடைபெறுகின்றன.

ஆண்களுக்கான கபடி போட்டியை மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இளைஞர் எழுச்சி நாளை கொண்டாடும் வகையில், ரூ. 49 லட்சம் மதிப்பு மொத்த பரிசுத் தொகையுடன், நவம்பர் 15 முதல் டிசம்பர் 28 வரை, கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில், கரூர் மாவட்டத்தில், கபடி, சிலம்பம், சதுரங்கம், கைப்பந்து, இறகுப்பந்து, கால்பந்து, சைக்கிள் ரேஸ், ஸ்கேட்டிங், மராத்தான் மற்றும் கிரிக்கெட் என தொடர் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன.

கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் ஆண்களுக்கான கபடி போட்டிகள் இரண்டு நாட்கள் நடைபெற்றன. கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. போட்டிகளை துவக்கி வைத்து பார்வையிட்டார். நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கலந்து கொண்டு விளையாடினர்.

ஆண்களுக்கான கபடி போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு, ரூ. 2,15,000 மொத்த பரிசுத்தொகை மற்றும் வெற்றிக் கோப்பைகள் வழங்கப்பட்டன. கபடி போட்டியில் அர்ஜுனா விருது பெற்றவரும், கபடி பயிற்சியாளருமான மணத்தி பி. கணேசன் பரிசுகளை வழங்கினார்.

---

## தஞ்சை மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூல் அறிமுக விழா!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன், செந்தலை ந.கௌதமன், ஜெ.ஜெயரஞ்சன் கோவி.லெனின், இரா.ப்ரீத்தி பங்கேற்பு!

தஞ்சாவூர், நவ.26-

தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூல் அறிமுக விழா தஞ்சை அண்ணா நூற்றாண்டு அரங்கில் நடைபெற்றது.

தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.முகில் வேந்தன் வரவேற்புரை ஆற்றினார். முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, இளைஞர் அணி துணைச் செயலாளர் ந.இளையராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், கே.டி.மகேஸ்கிருஷ்ணசாமி, தஞ்சை மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு என்ற நூலினை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றினார்.

காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூலின் சிறப்புகள் பற்றி கருத்துரையாளர்கள் கழக கல்வியாளர் அணி தலைவர் புலவர் செந்தலை ந.கௌதமன், மாநில திட்டக்குழு துணைத்தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோ.வி.லெனின், கழக இளம் பேச்சாளர் இரா.பிரித்தி ஆகியோர் உரையாற்றினார்கள்

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக நிர்வாகிகள் எல்.ஜி.அண்ணா, கனகவல்லி பாலாஜி, மணிமாறன், ஒன்றிய கழக செயலாளர்கள் கல்லணை செல்ல கண்ணு, இரா.உலகநாதன், வை.சிவசங்கரன், என்.கௌதமன், கோ.அரசாபகரன், அசோக்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.எஸ்.செந்தமிழ்ச்செல்வன், சி.ஏ.சுரேஷ், அ.ராஜேஷ்கண்ணா, எம்.எஸ்.வெங்கடேசன், மு.கா.கார்த்தி, மாநகரத் துணை அமைப்பாளர்கள் மதிபாலன், சதீஷ்குமார், திருஞானசம்பந்தம், பிரசாத், கிறிஸ்டோபர், விஜய், தஞ்சை பிரபு, மற்றும் பகுதி கழக செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள், திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவில் மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் வாசிம் ராஜா நன்றியுரை கூறினார்.

---

## நாமக்கல் மாநகராட்சி,

# வகுரம்பட்டியில் புதிய நியாய விலைக் கடை!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. திறந்து வைத்தார்!

நாமக்கல், நவ.26-

நாமக்கல் மாநகராட்சி, வகுரம்பட்டி பகுதியில் உள்ள இந்திரா நகரில், பகுதி நேர நியாய விலைக் கடை, கல்கி மகளிர் சுய உதவி குழுவினர் மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டட திறப்பு விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு, புதிய நியாய விலைக் கடையைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், மேயர் கலாநிதி, துணைமேயர் பூபதி, நாமக்கல் தெற்கு நகர கழகச் செயலாளர் ராணா ஆனந்த், ஒன்றிய செயலாளர் பழனிவேலு, பொருளாளர் இந்திரா நகர் கணேசன் மற்றும் கூட்டுறவுத்துறை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.


